
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



எண்ணிவரும் பக்தருக்கே எழில்கல்வி செல்வமெனும்
கண்கொடுத்துக் காப்பாற்றும் கண்ணாத்தாள் அடிபோற்றி
தண்ணமுதக் கம்பனுக்கும் தன்னருகே இடங்கொடுத்துப்
பண்ணிசைக்கக் கேட்டிருக்கும் பாவைதிருத் தாள்போற்றி.

நவம்பர் 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 10

சுக்ல
ஐப்பசி

நவம்பர்
1989

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வீரே.

— திருமூலர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்


வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00



புத்தக வங்கியின் ஆண்டு விழாவில்...

30, 35 வாரப் பத்திரிகைகளின் போட்டிக்கிடையே திரு. லேனா தமிழ்வாணன் ''கல்கண்டு'' இதழைச் சிறப்பாக நடத்தி வருகிறார். அவர் இந்த விழாவிற்கு வந்தது நமது இளைஞர்களுக்குக் கிடைத்த பேறு. மிகச்சிறந்த தலைவர்கள் இருந்து முன்பு நம்மை வழி நடத்திச் சென்றார்கள். இப்போது அப்படிப்பட்ட தலைவர்கள் இல்லை. எனவே திரு. லேனா தலைமை ஏற்று இளைஞர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

கல்வி, வாழ்க்கையில் முன்னேற உதவுகிறது. எனவே கல்வி மிக மிக அவசியம். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். சுயமாகச் சம்பாதிக்க முடியாதவன் பணம் கேட்கிறான். மாமியார் சாமான், சீதனத்தை ஒழிக்க வேண்டும். பழ. இராமசாமி, லேனா போன்றவர்கள் சீர் திருத்தம் செய்ய வேண்டும்.

— கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார்

ராஜாசர் அண்ணாமலை செட்டியார், வள்ளல் அழகப்பர், கருமுத்து போன்றவர்கள் கல்விக்குக் கண் கொடுத்தார்கள். தமிழிசை வளர்ச்சிக்கு நகரத்தார்கள் முக்கிய காரணம்.

— சொக்கு சுப்பிரமணியம்

இந்தப் புத்தக வங்கியினிடத்தில் தொடக்கத்திலிருந்தே நான் ஈடுபாடு காட்டி வருகிறேன். இதன் தலைவர் திரு. பழ. இராமசாமி சாமர்த்தியமானவர். இவர்கள் பொதுப் பணத்தைச் சிக்கனமாகச் செலவழிப்பதைப் பாராட்டுகிறேன். இவ்வங்கி சரியாக, முறையாக நூலக முறைப்படி இயங்கி வருகிறது ஒவ்வொருவரும் முடிந்த அளவு சுயமாகப் புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டும்.

— லேனா தமிழ்வாணன்

நல்ல செயல்கள் செய்பவர்களைப் பாராட்ட பரந்த மனப்பான்மை வேண்டும். காலதாமதமானாலும் திருச்சி சங்கத்தினரைப் பாராட்ட முன் வந்த புத்தக வங்கியினரைப் பாராட்டுகிறேன். நம்மில் ஒற்றுமைக் குறைவு உள்ளது. அதை நீக்க வேண்டும். நம்மில் வசதிக் குறைவானவர்களை வசதி மிக்கவர்களாக ஆக்க நாமே முயற்சிக்க வேண்டும்.

— எம். சிஎன். மாணிக்கம்

ஒரு டன் பேசுவதை விட ஒரு அவுன்ஸாவது செயல் புரிய வேண்டும். 'இரண்டு பெண்களுக்குத் தந்தையாகப் போ' என்றால் அது தான் சாபம் ''நானும் செய்ய மாட்டேன்; செய்கிறவர்களையும் செய்ய விடமாட்டேன்'' என்பது நம் குறை. நம் சமூகம் முன்னேற பெண்கள் நன்கு படிக்க வேண்டும்.

— சொ. சொ. மீ. சுந்தரம்

'சொ. சொ. மீ.' என்பது 'சொல்லச் சொல்ல மீண்டும்' கேட்

கும் பேச்சாகும். 64 திருவிளையாடல்கள் நடை பெற்ற இடம் மதுரை. அந்த மதுரையில், 64 திருமணங்களை நடத்தி வைத்த திருச்சி சங்கத்தினருக்குப் பாராட்டு விழா நடைபெறுவது ஒற்றுமை யாகும். உச்சிப் பிள்ளையார் கோவிலையும் அகண்ட காவிரியையும் கொண்டது திருச்சி. எனவே தான் திருச்சி சங்கத்தினர் விரிந்த மனம் படைத்தவர்களாக இருக்கின்றனர் போலும்!

— அரு. சோமசுந்தரம்

(மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 15-10-89 அன்று நடைபெற்ற நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் பேசியவை.)

ஏ ஆர். லெட்சுமணனின் பாராட்டு விழாவில்,..

உயர் நீதி மன்றம் தோன்றி 126 ஆண்டுகளில் அரசின் உயர் பொறுப்புமிக்க அரசு வழக்கறிஞராக இதுவரை நம் இனத்தவர் இடம் பெறவில்லை. இப்போது திரு. ஏஆர். லெட்சுமணன் அப் பொறுப்பினை ஏற்றிருப்பது நம் சமூகத்திற்குச் சிறப்புச் சேர்க்கிறது. திரு. லெட்சுமணன் போன்றவர்களைப் பாசத்துடன் பாராட்ட வேண்டும். இன முன்னேற்றத்திற்கு ஆச்சிகள் உறு துணையாக இருக்க வேண்டும்.

— முனைவர் தமிழண்ணல்

மேன்மைமிகு லெட்சுமணன் அவர்கள் என்னுடைய மாணவர் துணிவும் நேர்மையும் இறையாண்மையும் மிக்கவர். இவர்கள் நீதி பதியாக வரவும் இச்சங்கம் விரைவில் தனக்கென சொந்தக் கட்டிடம் ஒன்றினை வாங்கவும் கட்டிடத் திறப்பு விழாவும் நீதிபதியாகி பாராட்டு விழாவும் ஒரு சேர நடத்திட வாழ்த்துகிறேன்.

— முனைவர் சுப. அண்ணாமலை

இச்சங்கம் காலம் தாழ்த்திப் பாராட்டு விழா நடத்தினாலும் மணி விழாக் கண்ட முப் பெரியவர்கள் மீனாட்சி திருநகரிலிருந்து வந்து மனமுவந்து பாராட்டியது எனக்கு உற்சாகத்தைத் தருகிறது. என்னுடைய மூதாதையர்களின் அறப்பணியாலும் இன முன்னேற்றத்திற்கு முடிந்த அளவு உதவியதாலுமே இப்பதவி எனக்குக் கிட்டியது.

— ஏ ஆர். லெட்சுமணன்

(கும்பகோணம் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் சார்பாக 15-10-89 அன்று அரசு வழக்கறிஞர் திரு. ஏஆர். லெட்சுமணனுக்கு நிகழ்ந்த பாராட்டு விழாவில் கூறியவை)

கூட்டுத் திருமணம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கம் அடுத்த கூட்டுத் திருமணத்தை வருகிற சுக்ல ஆண்டு தைத் திங்கள் 16ஆம் நாள் (29-1-1990) திங்கட்கிழமை பிள்ளையார்பட்டியில் நடத்தி வைக்க இருக்கிறது. அதற்கான விண்ணப்பங்களை நகரத்தார் சங்கம், 2 ஓத்தமால் தெரு, திருச்சி - 620 002 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

"நான் ஆளுநரானால்...."

60 வயது ஆனவர்களை அரசு வெறுத்து ஒதுக்கி விடுவது வருந்தத்தக்கது. நான் ஆளுநரானால் 60 வயது ஆனவர்களை வைத்து நாடாளுவேன். இந்திய அரசும் தமிழக அரசும் இதைக் கருத்தில் கொள்வது நல்லது.

— கி. ஆ. பெ. விசுவநாதம்

(முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு மதுரையில் 13-10-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)

வி. என். சிடி. வள்ளியப்பன் தாயகம் வந்தார்

'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின் மூத்த புதல்வர் திரு. வி. என். சிடி. வள்ளியப்பன் தம் குடும்பத்தினருடன் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு 25-10-89 அன்று சென்னை வந்து, சென்னையிலிருந்து புறப்பட்டு 27-10-89 வெள்ளிக் கிழமை காலை பாண்டியன் துரித இரயிலில் மதுரை வந்து சேர்ந்தார். சென்னை விமான நிலையத்திலும் மதுரை இரயில் நிலையத்திலும் அவர்களை உற்றார், உறவினர், நண்பர்கள் வரவேற்றனர்.

வ. சுப. மாணிக்கனாரின் விருப்ப முறி

காலஞ்சென்ற தமிழறிஞர் முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் உயிருடன் இருந்த போது தம்முடைய கையெழுத்தில் எழுதிவைத்துள்ள உலக முரசு, தர் சிந்தனைகள் தமிழ் மானம், தமிழாயிரம் இன்னும் பிறவற்றை நூலாக வெளியிட விருப்ப முறி (உயில்) ஒன்றை எழுதி வைத்துள்ளார்கள்.

பேராசிரியர் திரு. அ. விசுவநாதன் திரு. மா. சௌந்தர பாண்டியன், திரு. மா. தொல்காப்பியன் (அவரது புதல்வர்) நெற்குப்பை திரு இராம. விசுவநாதன் திரு. பழ. கருப்பையா ஆகியோர் கொண்ட குழுவின் மூலமாக மேற்படி நூல்களை வெளியிட்டு அவற்றில் கிடைக்கக் கூடிய வருவாயைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அளிக்கும் படியும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக காரைக்குடியில் 8-10-89 அன்று கூடிய அக்குழுவினர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் நினைவு நாளில் அந்நூல்களில் சிலவற்றை வெளியிட முடிவு செய்துள்ளார்கள்.

பிள்ளையார்பட்டி அறங்காவலர்கள்

பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோயிலின் நடப்பு அறங்காவலர்களாக ஆ. முத்துப்பட்டணம் நாரா. சித. நா நாச்சியப்பன் என்ற தண்ணீர்மலை செட்டியார் அவர்களும் (தலைவர், ஆ. முத்துப் பட்டணம் ஊராட்சி மன்றம்) கண்டனூர் மு நா. சித. நாச்சியப்ப செட்டியார் அவர்களும் தொண்டாற்றி வருகிறார்கள். இவர்கள் இருவரும் 5-9-89 அன்று, சென்ற ஆண்டு அறங்காவலர்களிடமிருந்து பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—46—

சிக்காக்கோவில் இருந்து ஒரு வேனில் நாங்கள் எல்லோரும் டெட்ராய்டுக்குச் சென்றோம். அங்கு சுருளி என்ற தொழில் அதிபர் எங்களை வரவேற்று அவர் இல்லத்தில் தங்கச் செய்தார். அவருடைய மனைவி டாக்டராக இருக்கிறார். உற்றார், உறவினர் என்று பலரை இந்தியாவிலிருந்து வரவழைத்து பெரும் வியாபாரம் செய்து வருகிறார். அவரது வீடு மிகப் பெரியது எங்களுக்கு டெட்ராய்டு முழுவதையும் சுற்றிக் காண்பித்தார். செவர்லட் முதலிய கார்கள் தயாரிக்கின்ற 'ஜெனரல் மோட்டார்ஸ்' என்ற கம்பெனி டெட்ராய்டில் தான் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை ஒரு சிறிய ஊர் போல இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைப் பார்ப்பதற்கு திரு. சுருளி அனுமதி பெற்றுக் கொண்டு எங்களை அழைத்துக் கொண்டு சென்றார். அத்தொழிற்சாலையில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்க்கி



கென்னடி சுடப்பட்ட கார் அருகே வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும்.

றூர்கள். முதலில் காரின் ஒரு சிறிய பாகத்தைச் செய்கிறூர்கள். அதைப் பார்த்துக்கொண்டு நடந்தோமானுல் காரின் ஒவ்வொரு பகுதி செய்யப்படுவதையும் கடைசியாக ஒரு கார் முழுமை பெறுவதையும் காண முடிகிறது அங்கு தயார் செய்யப்பட்ட கார்களை உலகத்திலுள்ள தலைவர்களுக்கு எல்லாம் விற்பனை செய்கிறூர்கள். உலகத் தலைவர்கள் அந்தக் கார்களைப் பயன்படுத்திவிட்டு வேண்டாம் என்று சொல்லுகிறபோது ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியினர் அவற்றை விலைகொடுத்து வாங்கி அவர்களுடைய ஷோ ரூமில் வைத்து விடுகிறூர்கள். இங்கிலாந்து ராணிஎலிசபத் முடிசூட்டு விழாவின் போது பயன்படுத்திய கார்; அதிபர் கென்னடி சுடப்பட்டபோது பயன்படுத்திய கார் முதலியவைகளைத் திரும்ப வாங்கி ஷோ ரூமில் வைத்து விவரம் எழுதி வைத்திருக்கிறூர்கள். தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு வருகின்ற ஒவ்வொருவருக்கும் நாமும் ஏதாவது குண்டூசியாவது தயார் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும். எங்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் சிக்காக்கோ வந்தோம்.

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து பஸ் மூலம் லாஸ்வேகஸ் என்ற ஊரை அடைந்தோம். பஸ் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு பாத்ரூம் வசதியோடு மிக நன்ருக இருந்தது. 500 மைல் தூரத்தை 6 மணி நேரத்தில் கடந்தோம். லாஸ்வேகசில் உலகத்திலேயே மிகப் பெரிய அளவில் சூதாட்டம் நடக்கிறது. ஒவ்வொரு ஹோட்டலும் அரண்மனைபோல இருக்கிறது. இரவு நேரங்களில் மைசூர் தசராவில் விளக்குகள் அலங்கரித்து இருப்பது போல ஹோட்டல்களில் விளக்குகளை அலங்கரித்து வைக்கிறூர்கள். ஒரு நாளைக்கு கோடி ரூபாய் லாப-நட்டம் பார்க்கிற சூதாடிகளும் அனைத்து உலக நாடுகளிலிருந்தும் வந்து கலந்து கொள்கிறூர்கள். அங்கிருந்து அதை எல்லாம் வேடிக்கை பார்த்துவிட்டு அருகில் இருந்த கிரான்ட்கானியன் என்ற மலைப் பிரதேசத்தைப் பார்ப்பதற்குச் சென்றோம். ஒரு சிறிய ஹெலிகாப்டரை வாடகைக்கு எடுத்து நாங்கள் பத்துப் பேர் ஏறிச்சென்று சுற்றிப் பார்த்தோம். விமானத்தில் அந்த மலைகளுக்கு இடையே செல்வது ஒரு வித்தியாசமான அனுபவம். ஓமர் ஷெரீப் நடித்த ''மெக்கன்னுஸ் கோல்டு'' என்ற படம் இங்குதான் எடுக்கப்பட்டது. மீண்டும் நாங்கள் சிக்காக்கோ வந்து சேர்ந்தோம்.

(வளரும்)

தமிழண்ணலுக்குப் பாராட்டு விழா!

மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறையின் ஒருங்கிணைப்பாளரும் ஆராய்ச்சித்துறைப் பேராசிரியருமான 'தமிழண்ணல்' என்ற முனைவர் இராம. பெரியகருப்பன் அவர்களின் மணி விழாவையொட்டி அவர்களுக்கு 7-10-89 அன்று மதுரை நியூ காலேஜ் ஹவுஸ் அரங்கில் பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையேற்றூர்கள்.

பாராட்டுரை

முனைவர் திரு. இரா. மோகன் வரவேற்புரை நிகழ்த்த 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு, கவிஞர் திரு. முடி

யரசன், முனைவர் திரு. ச. மெய்யப்பன், முனைவர் திரு. சுப. அண்ணாமலை, திரு. சொக்கு சுப்பிரமணியன், திரு. செ. செல்லப்பன், ''தமிழ்ப் பாவை'' ஆசிரியர் திரு. கருணைதாசன் பேராசிரியர்கள் திரு. சாலமன் பாப்பையா, திரு. மா. வண்ண முத்து பதிவாளர் திரு. சிவசங்கரன், திரு. க. திருமாறன் ஆகியோர் மணி விழா நாயகர், நாயகியைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

மலர் வெளியீடு

இவ்விழாவில், முனைவர் திரு. தமிழண்ணலின் மணி விழாவையொட்டித் தயாரிக்கப் பெற்ற மணிவிழா மலரின் முதல் படியினைப் பேராசிரியர் திரு. க. திருமாறன் வெளியிட திரு. பெ. தேவசகாயம் அதனைப் பெற்றுக் கொண்டார்.

நூல் வெளியீடு

இவ்விழாவில், முனைவர் திரு. தமிழண்ணல் ''தினமணி'' நாளிதழில் எழுதி வந்த கட்டுரைகளைத் தொகுத்துத் தயாரிக்கப் பெற்ற ''உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்ற நூலின் முதல் படியினை மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் திரு. சிவசங்கரன் வெளியிட அதனை திரு. செல்வி சௌந்தர பாண்டியன் பெற்றுக் கொண்டார்.

'வள்ளுவத் தென்றல்' திரு. மணிமொழியன் மணி விழாத் தம்பதியருக்குப் பொன்னாடை அணிவித்து பாராட்டுரை வழங்கினார்.

நிதி வழங்கல்

தொழிலதிபர் 'அறநெறி அண்ணல்' லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் மணி விழாத் தம்பதியருக்கு மாலை யணிவித்து மணி விழாக் குழுவின் சார்பாக ரூ 15,000/- நிதியை வழங்கினார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மணி விழாத் தம்பதியருக்குப் பொன்னாடை போர்த்தி தலைமையுரையாற்றினார்கள்.

'தாலாட்டுக் கவிஞர்' வேந்தன்பட்டி திரு. T. குமரப்பன் வாழ்த்துக் கவிதை வாசித்தளித்தார். கவிஞர் திரு. சிற்பி வாழ்த்து மடல் வாசித்தளித்தார்.

நகர மக்கள் கல்விக் குழு, பாரதி இலக்கியப் பேரவை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், யாதவர் கல்லூரி, நகரத்தார் இளைஞர் சங்கம், நகரத்தார் புத்தக வங்கி மதுரை திருவள்ளுவர் கழகம் திராவிடர் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளின் சார்பாகவும் பாராட்டுச் செய்யப் பெற்றது.

''நகரத்தார் குரல்'' ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் திரு. தி. கனகசபை செட்டியார், கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் ஆகியோரும் மணி விழாத் தம்பதியருக்கு மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்துக் கூறினர்.

தமக்கு அளிக்கப் பெற்ற பாராட்டுக்கு முனைவர் திரு. தமிழண்ணல் நன்றி தெரிவித்துப் பேசினார்.

கவிஞர் திரு. மீரா நன்றி கூறினார்.

இந்தப் பாராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி முடித்த முனைவர் திரு. இரா. மோகன் கவிஞர் திரு. மீரா ஆகிய இருவரையும் பாராட்டி இவ்விழாவில் தவத்திரு அடிகளார் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

"நகரத்தார் சமூகம் தலை சிறந்த சமூகம்"

நகரத்தார் சமூகத்தில் நான் குடும்ப உறுப்பினராகப் பழகியவன். 75 ஆண்டுகளுக்கு முன்பே நகரத்தார்களின் நட்பைப் பெற்றவன் நான். ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார், கருமுத்து தியாகராசச் செட்டியார், வள்ளல் அழகப்பர் குடும்பங்களில் பழகியவன். நகரத்தார் சமூகம் தலை சிறந்த சமூகம். பெரும் சிறப்பிற்குரியது. சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி வருபவர்கள் நகரத்தார்கள். கொலையாளிகளைச் சந்திக்காத சமூகம்; தூக்கு மேடை ஏறாத சமூகம்.

நகரத்தார் சமூகம் இல்லையானால் 100க்கு 25 பேர் கல்வியறிவு பெற்றிருக்க மாட்டார்கள் என்று 1940ல் நான் எழுதினேன்.

மூன்று பல்கலைக் கழகங்களை நிறுவிய சமூகம், நகரத்தார் சமூகம். ஒருவன் தன் சொந்தப் பணத்தில் பல்கலைக் கழகம் நிறுவினான் என்று உலகத்தில் உள்ள ஐந்து கண்டங்களிலும் வரலாறு கிடையாது.

நகரத்தார் சமூகத்தில் 25 வயதைத் தாண்டிய பெண்கள் திருமணமாகாமல் ஏராளமாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதற்கு வரதட்சணைக் கொடுமையே காரணம். பலர் வசதியாக இருப்பதைவிட சிலர் கூட தாழ்ந்த நிலையில் இருக்கக் கூடாது. சுப. அண்ணாமலை, தமிழண்ணல் போன்றவர்கள் ஆற்றிய கல்வித் தொண்டு போதும்; எழுத்துத் தொண்டு போதும். அவர்கள் இனி மேல் சமூகத் தொண்டில் ஈடுபட வேண்டும்.

— கி. ஆ. பெ. விசுவநாதம்

(முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு மதுரையில் 13-10-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)

ஒற்றெழுத்து பற்றி தென்னரசு!

தமிழ்த் திரைப்படங்களின் பெயர்களைத் தேர்வு செய்ய வானதி பதிப்பகத்தின் நூல்கள் பெரிதும் உதவுகின்றன. ''சோலை குயில்'' என்பது ஒரு படத்தின் தலைப்பு. இதில் 'க்' என்ற ஒற்றெழுத்து இல்லை. 'I is a President' என்பது எப்படிக் குற்றமோ, அது போல் ப், ச், க் என்று ஒற்றெழுத்துக்கள் இல்லாத சொற்கள் குற்றமுடையன. தமிழில் ஒற்றெழுத்தை விட்டு எழுதும் போக்கைத் தமிழறிஞர்கள் குற்றமாகக் கருத வேண்டும்.

— எஸ். எஸ். தென்னரசு.

(மதுரையில் 7-10-89 அன்று முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்)

SUBAM TRAVEL AGENCY

சுபம் டிராவல் ஏஜன்ஸி.

226, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1. ☎ 22712

சபரிமலைப் பயணம்

3 நாட்கள் பிரயாணம்: மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - பந்தளம் - ஆரன்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

25-11-89 To 27-11-89	17-12-89 To 19-12-89
29-11-89 To 1-12-89	21-12-89 To 23-12-89
3-12-89 To 5-12-89	24-12-89 To 26-12-89
7-12-89 To 9-12-89	1-1-90 To 3-1-90
10-12-89 To 12-12-89	5-1-90 To 7-1-90
14-12-89 To 16-12-89	17-1-90 To 19-1-90

மேற்கண்ட 3 நாட்கள் பயணத்திற்கு: பஸ் கட்டணம், தங்கும் வசதி, காலை டிபன் காபி, பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட், காரம், காபி, இரவு ஆகாரம் உள்பட ஒரு சாமிக்கு ரூ. 220

அரைக் கட்டணம்: 3 வயது முதல் 8 வயதிற்குள் ரூ. 175

4 நாட்கள் பிரயாணத்திற்கு: மதுரை - பழனி or திருமூர்த்திமலை குருவாயூர் (தங்கல்) - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - வைக்கம் - ஏட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

3-12-89 To 6-12-89	31-12-89 To 3-1-90
17-12-89 To 20-12-89	5-1-90 To 8-1-90

மேற்கண்ட 4 நாள் பிரயாணத்திற்கு: பஸ் கட்டணம் 4 வேளை ஆகாரம் தங்கும் வசதியுள்பட ஒரு சாமிக்கு ரூ. 290

அரைக் கட்டணம்: 3 முதல் 8 வயதிற்குள் ரூ. 240

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - குளத்துப்புழை - ஒச்சிரை (மஹாதேவர்) - ஹரிப்பாடு (சுப்பிரமணியர்) - அம்பலப்புழை (கண்ணன்) (தங்கல்) - திருவல்லா (விஷ்ணு) - திருவண்வண்டூர் (கோசால கிருஷ்ணர்) - செங்கண்ணூர் (பகவதி) - ஆரண்முலா (கிருஷ்ணர்) எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

14—12—89 To 17—12—89

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட ஒரு சாமிக்கு ரூ. 290

அரைக் கட்டணம் ரூ. 240

4நாட்கள் பிரயாணம்: மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமரி

சுசீந்திரம் - திருவனந்தபுரம் (தங்கல்) - வர்க்கலா - பந்தளம் - ஆரண்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.

23—12—89 To 26—12—89

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு தங்கும் சிலவு உள்பட
ஒரு சாமிக்கு ரூ. 290

அரைக் கட்டணம் ரூ. 240

6 நாட்கள் ஸ்ரீ மூகாம்பிகை-ஐயப்பன் தெரிசனம்

29—12—89 To 3—1—90

மதுரை - பன்னூரி - மைசூர் - சுப்பிரமண்யா - தர்மஸ்தலம் - உடுப்பி மூகாம்பிகை - குருவாயூர் - திருப்பரயாறு - கொடுங்களூர் - காலடி- சோட்டாணிக்கரை - எருமேலி - பம்பை - சன்னிதானம் - செங் கோட்டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு தங்கும் சிலவு உள்பட
ஒரு சாமிக்கு ரூ 420

அரைக் கட்டணம் ரூ 330

4 நாட்கள் பெரியபாதைப் பயணம்

6—1—90 To 8—1—90

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - எருமேலி - பெரிய பாதையில் கரிவலம்தோடு (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங் கோட்டை - மதுரை.

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட ஒரு சாமிக்கு ரூ 300

அரைக் கட்டணம் ரூ 240

6 நாட்கள் மகரஜோதி - பெரியபாதைப பயணம்

11—1—90 To 16—1—90

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - ஒச்சிரை (மஹாதேவர்) - ஹரிப் பாடு - (சுப்பிரமணியர்) - அம்பலப்புழை (கண்ணன்) (தங்கல்) - திருவல்லா (விஷ்ணு) - திருவண்வண்டூர் - (கோகுலகிருஷ்ணர்) - செங்கண்ணூர் (பகவதி) - ஆரன்முலா (கிருஷ்ணர்) - எருமேலி (தங்கல்) - பெருவழிப் பாதையில் முக்குழி (தங்கல்) - பம்பை அடைந்து ஜோதி பார்த்தல் (தங்கல்) - சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.
நாள் 6க்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம், தங்கும் வசதி உள்பட
ஒரு சாமிக்கு ரூ 420

அரைக் கட்டணம் ரூ 330

2 நாட்கள் சபரிமலைப் பயணம்

9—1—90 To 10—1—90

மதுரை - குமுளி - எருமேலி - பம்பை - சன்னிதானம் (தங்கல்). செங்கோட்டை - மதுரை.
நாள் 2க்கு பஸ் கட்டணம், 4வேளை ஆகாரம், உள்பட
ஒரு சாமிக்கு ரூ 150


அரைக் கட்டணம் ரூ 120

ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகள்

ஆதி சங்கரரின் முதல் சீடரான ஸ்ரீ சுரேஸ்வராச்சாரியார் நிறுவிய மடம் சிருங்கேரி மடமாகும். இந்த சிருங்கேரி சாரதா பீடத்தின் 35 ஆவது அதிபராகப் பீடமேற்றவர் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் தீபாவளி தினத்தன்று சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள். இவர்களது இயற்பெயர் சீனிவாசன் என்பதாகும்.

இவர்கள் பன்மொழிகளிலும் பல்கலைகளிலும் வல்லவர். சிற்ப சாஸ்திர நுட்பத்திலும் சங்கீதத்தின் நயத்திலும் கரை கண்டவர். இந்தியா முழுவதும் சமஸ்கிருதப் பாடசாலைகளை நிறுவி இந்து மதத்தின் அடிப்படையான வேதமும் சாஸ்திரங்களும் பாதுகாக்கப்படுவதற்கு அதிக முயற்சி மேற்கொண்டவர்கள்.

இவர்களுக்கு 22-5-1931ல் சன்யாச தீட்சை வழங்கப்பட்டு 'ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்' என்ற பட்டம் சூட்டப் பெற்றது. ஸ்ரீ சந்திரசேகரபாரதி முக்தியடைந்தபின் 1954ல் இவர்கள் பீடமேற்றார்கள். 1974ல் இவர்கள் தனது இளையவரைத் தேர்வு செய்தார்கள். ஸ்ரீ சீதா ராமாஞ்ச நேயலு என்ற அந்த இளைஞர் சன்யாச தீட்சை பெற்று 'ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள்' என அழைக்கப் பெற்றார். ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த சுவாமிகள் 21-9-89 அன்று முக்தி பெற்றதை அடுத்து 36 ஆவது அதிபரான ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள் சாரதா பீடத்தின் பொறுப்புக்களை ஏற்றுள்ளார்கள்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தந்த சிருங்கேரி ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகளையும் ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகளையும் அன்றைய தக்கார் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்ற காட்சி.

தமிழண்ணலின் பாராட்டு விழாவில்...

தமிழர் வரலாறு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. வரலாற்றைப் பேணிக் காக்காதது நம் நாட்டின் குறை. பண்டிதமணி, வ. சுப. மாணிக்கம், தமிழண்ணல் ஆகியோர் வழி வழித் தமிழறிஞர்கள். தமிழின் தரம் குறைந்திருக்கிறது. தமிழ் வளர வேண்டும் என்பதற்காக உங்கள் வாழ்வு வளர வேண்டுமென ஆசைப்படுகிறேன். நாடு தழுவிய அறிஞர் கூட்டம் இங்கு இருக்கிறது. தமிழறிஞர்களே தமிழறிஞரைப் பாராட்டுவது சிறப்பு. தமிழுக்கு எதிர்காலம் இருப்பதாகவே சட்டம் உணர்த்துகிறது.

— குன்றக்குடி அடிகளார்

'பெரியகருப்பன்' என்று செட்டிநாட்டிலும் 'தமிழண்ணல்' என்று தமிழ் உலகிலும் பெயர் பெற்றவர் இவர். சிறுவயதிலிருந்தே தமிழண்ணலை நான் அறிவேன். கண்ணதாசன் இலக்கிய வட்டத்தில் இருவரும் இருந்தவர்கள். இவர் என் தொகுதியைச் சேர்ந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். இவருடைய எழுத்துக்கள் எல்லோரும் விரும்பிப் படிக்கும் வகையில் உள்ளது. குறிப்பாக இவருடைய தமிழ், எழுத்தாளர்களுக்குப் பயன்படுகிறது. தமிழறிஞர்களுக்கு வயது கிடையாது.

— எஸ். எஸ். தென்னரசு

தமிழுக்குப் பாராட்டு விழா என்பதால் ஆர்வர் மிகுதியால் இங்கு வந்தேன். நானே அவர்; அவரே நான். எனக்கு 70ஆவது பிறந்த நாள் இன்று. எனவே இது எனக்கு நடைபெறும் பாராட்டு விழாவாகக் கருதுகிறேன். நாங்கள் உள்ளம் ஒத்த, உணர்வுகள் ஒத்த நண்பர்கள். எனக்குக் குல வேறுபாடு இல்லை; எங்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை. நாங்கள் இருவரும் ஒன்றாகப் பணியாற்றிய காலத்தில் எங்களை 'இரட்டையர்' என்று சொல்வார்கள். எங்கு சென்றாலும் நானும் அவரும்தான் மிதிவண்டியில் சென்று தமிழைப் பரப்பினோம். 'கவிஞன்' என்று என்னை அறிமுகப்படுத்தியவர் அவர். நான் இன்றும் பகுத்தறிவாளன். என்னைப் பகுத்தறிவாளனாக ஆக்கியவர் தமிழண்ணல் தான். ஆனால் அவர் பழநிக்கு நடக்கிறார். ஓரளவு கூட அகந்தை இல்லாதவர் அவர். எனவே தான் பாராட்டப் பெறுகிறார். இன்றும் தொண்டராக இருக்க விரும்புகிறார். அவர் துணைவேந்தராக வரப் பெரிதும் விரும்புகிறேன். என் ஆசை நிறைவேறும் என நம்புகிறேன்.

— கவிஞர் முடியரசன்

புல்லாங்குழல் மாதிரி இருப்பவர்; ஆனால் அன்பாகப் பழகக் கூடியவர். இவர் பயின்ற பள்ளியில் அழகப்பர், ஏவி. எம். போன்றவர்கள் பயின்றிருப்பது பெருமைக்குரியது தமிழண்ணல் நல்ல அறிஞர், சான்றோர், பெருமகனார்.

— முனைவர் ச. மெய்யப்பன்

மதுரையில் நான் தமிழண்ணலின் தமிழ்ச் சான்றாண்மையைப் பெற்று வருகிறேன் அவர் பல துறைகளில் ஆசிரியர். 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' மூலம் மூலை முடுக்குகளில் உள்ள மக்களுக்கெல்லாம் ஆசிரியராக இருக்கிறார்.

— முனைவர் சுப. அண்ணாமலை

தமிழ் தழைக்க குறள் விழா நடைபெற்றது. அது மாணவர்களி

டையே எழுச்சியை ஏற்படுத்தியது. தமிழண்ணலின் ''தாலாட்டு'' ஒரு அருமையான நூல். நாட்டுப்புறக் கலையில் எனக்கு ஈடுபாடு ஏற்படக் காரணமானவர் தமிழண்ணல். தமிழ் வளர்ச்சிக்கு காரைக் குடிப் பகுதியில் அண்ணன் பாடு பட வேண்டும்.

— சொக்கு சுப்பிரமணியம்

என்னுடைய நாற்பது ஆண்டுக்கால பதிப்பக வாழ்க்கையில் மற்றவர்கள் ஏற்காததை இவர்கள் ஏற்றுக் கொண்டு செவ்வனே செய்தார்கள். பழமையைப் போற்றுபவர்கள்; புதுமையை வரவேற் பவர்கள். பிறருக்குச் சிறிது கூட துயரம் விளைவிக்க விரும்பாதவர் கள். நிறை குடம்.

— செ. செல்லப்பன்

தமிழண்ணலை 1958ல் கவிஞர் முடியரசன் மூலமாகச் சந்தித் தேன். மதுரையில் முதல் கவியரங்கம் பாடியவர்; நல்ல தமிழறிஞர்; பண்பாளர்; எழுத்தாளர் மன்றத் தலைவர்.

— கருணைதாசன்

1963 முதல் இன்று வரை நான் அவருடைய மாணவன். இவர் எழுத்தை வாழ்வின் உயிர் மூச்சாகக் கருதுகின்றவர். தமிழோடு தன்னை இணைத்துக் கொண்டவர். சிபாரிசு செய்ய யாரையும் தேட மாட்டார். தரவிரும்பினால் தகுதி அறிந்து தரட்டும் என்பார். அறிவுக்களஞ்சியம்; அடக்கமானவர்; 'தமிழண்ணலுடைய அறிவைக் காட்டிலும் அவருடைய அடக்கம் எனக்கு வெகுவாகப் பிடிக்கும்' என முன்னாள் துணைவேந்தர் திரு. சிட்டிபாபு அடிக்கடி கூறுவார்.

— பேராசிரியர் மா. வண்ணமுத்து

கடந்த நாற்பது ஆண்டுகளாக தமிழுக்குச் சிறந்த பணி யாற்றியவர். ஒப்பிலக்கியத்தில் மிகவும் ஈடுபாடுகொண்டவர். அவர் விரைவில் துணைவேந்தராகவேண்டும்.

-- பதிவாளர் சிவசங்கரன்

எனது தந்தையார் இராமசாமிச் செட்டியாருக்கும் தாயார் கல்யாணி ஆச்சிக்கும் இன்று நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் பட்ட வறுமை, என் செழிப்புக்குக் காரணம். என் வாழ்நாளில் முதன் முதலாக இன்றுதான் நிதி பெற்றிருக்கிறேன். இதை என் ஆய்வு நூலுக்குப் பயன்படுத்துவேன். எனக்குக் கிடைத்திருக்கிற செல்வம் எல்லாம் அன்புதான். என் மணிவிழா அறக்கட்டளையை ஓராண்டுக் குள் ஏற்படுத்துவோம். உங்களுடைய பேரன்பும் பேராதரவும் என்னை ஊக்குவிக்கின்றன.

— முனைவர் தமிழண்ணல்

(முனைவர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழாவையொட்டி 7-10-89 அன்று மதுரை நியூ காலேஜ் ஹவுஸில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தொகுத்தவை)

— ''எல்லெஸ்''



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் சிவகங்கைத் தொகுதியில் போட்டியிடுவதற்காக மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

ஃ தொழிலதிபரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவருமான லெ. நாராயணன் செட்டியார் அவர்களுக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் தவத்திரு தெய்வசிகாமணி அருணாச்சலதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 15-9-89 அன்று 'அறநெறி அண்ணல்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளார்கள்.

ஃ திரு. இனியவன் என்ற சென்னையைச் சேர்ந்த அன்பர் ''நனி புகழ் நகரத்தார்'' என்ற தலைப்பில் நகரத்தார்களின் அருமை, பெருமைகளைத் தொகுத்து நூலாக வெளியிட முயற்சி மேற்கொண்டுள்ளார்.

ஃ ஆயிரம் ஏடுகள் கொண்ட இராமாயணக் கதையை தம் முதாதையர் மரபுப்படி நெற்குப்பையைச் சேர்ந்த தமிழன்பர் திரு. இராம. விசுவநாதன் அவரது இல்லத்தில் 30-9-89 முதல் 7-10-89 வரை 8 நாட்கள் படித்துப் பட்டாபிஷேகம் செய்தார். இதுபோல் புரட்டாசி மாதத்தில் செட்டி நாட்டில் பல ஊர்களில் இராமாயணக் கதை படிக்கப் பெற்றது.

ஃ திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் ஆண்டு விழா 12-11-89 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ளது.

ஃ டாக்டர் ராஜாசர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களின் துணைவியார் ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அவர்களின் 85ஆவது பிறந்த நாள் நினைவு விழா சென்னை ராணி சீதை மன்றத்தில் 11-10-89 அன்று நிகழ்ந்தது.

ஃ மதுரையில் 30-9-89 அன்று தமிழ்நாடு தொழில் வணிகக் கழகத்தில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் தேர்தலில் அரிமளத்தைச் சேர்ந்த திரு. செ. செல்லப்பனும் கண்டவராயன் பட்டியைச் சேர்ந்த திரு. எஸ்பி. அழகப்பனும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

ஃ தேவகோட்டையைச் சேர்ந்த டாக்டர் ஆர். கருணாநிதி சிங்கப்பூரில் உள்ள ஸ்ரீ ருத்ர காளியம்மன் கோவிலின் தலைவராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஃ மதுரை குட்டைய ஞான தேசிக மடாலயத்தில் உள்ள அதிஷ்டானங்களின் மண்டலாபிஷேக விழா 24-10-89 செவ்வாயன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ சோழபுரம் அருள்மிகு அறம் வளர்த்த நாயகி அம்மன் உடனுறை அருள்மிகு அருள்மொழிநாதப் பெருமான் திருக்கோயிலின் மண்டலாபிஷேக விழா 27-10-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

சுப. அண்ணுமலையின் பாராட்டு விழாவில்...

டாக்டர் சுப. அண்ணுமலையை நான் நன்கு அறிவேன். அவர் எல்லா வகையாலும் தகுதி உடையவர். 36 ஆண்டுகளாக அவர் தியாகராசர் கல்லூரியில் பல துறைகளில் பணியாற்றியிருக்கிருர். சேவு. மெ., கலைத்தந்தை ஆகியோரின் ஆதரவால் வளர்ந்தவர். வள்ளுவத்தில் உள்ளம் தோய்ந்தவர். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி வருபவர்.

— லெ. நாராயணன் செட்டியார்.

கல்வித்துறையில் சிறந்த பணியாற்றியவர். அறிவும் ஆற்றலும் உள்ள மாணவர்களை உருவாக்கியவர். ஜன நாயக முறைப்படி வயிரவன் கோயில் நிர்வாகத்தை மாற்றியமைக்க உதவியவர். இராமலிங்க சுவாமிகளின் சன்மார்க்க சபையில் ஈடுபாடு கொண்டவர்.

— இராம. ரெங்கநாதன் செட்டியார்

ஆய்வு செய்வதில், கருத்துக்களை வெளியிடுவதில் வல்லவர். ஆழமாகப் பேசுபவர். நல்ல சொற்களை எடுத்துச் சொல்கிறவர். புலமை மிக்கவர். ஆழமான சைவப் பண்பு உடையவர்.

— குன்றக்குடி அடிகளார்.

கலைத்தந்தை கண்டெடுத்த முத்து. ஆடி வீதிக்குத் தக்கார் டாக்டர் சுப. அண்ணுமலை அவர் இல்லையேல் சொ. சொ. மீ. சுந்தரம் தக்கார். இருக்கின்ற காலம் வரை அவர் ஆடி வீதித் தக்கார். கண்ண தாசன் இல்லாத குறையை சுப. அண்ணுமலை நிறைவு செய்கிருர்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு நடைபெறும் மணி விழாவாக நினைத்து உவகையோடு பூரிப்போடு இவ்விழாவில் கலந்து கொள்கிறேன். டாக்டர் சுப. அண்ணுமலை அவர்கள் என் தந்தையாரோடும் அன்னையாரோடும் மிக நெருங்கிப் பழகி வருபவர். அவர்கள் முதல்வராகப் பல்லாண்டுகள் சிறந்த பணி புரிந்தார்கள். 'தியாகராசர் கல்லூரி சரியாக நடக்காத கல்லூரி' என்று இருந்த முத்திரையை மாற்றி நல்ல பெயர் வாங்கித் தந்தார்கள் என்பதை நன்றி உணர்வோடு கூறுகிறேன். வள்ளுவன் சொல்லுக்கு எடுத்துக் காட்டாக அவர்கள் கல்வித் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் தொடர்ந்து செய்ய வேண்டும்.

— கருமுத்து தி. கண்ணன்

எங்கள் குடும்பத்தின் சார்பில் இவ்விழாவில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழை வளர்க்க என் தமையனுர் மெ. அவர்களுக்கும் கலைத்தந்தை அவர்களுக்கும் தனித் திறமை இருந்தது. வாழ்விலே முன்னேறிய சுப. அண்ணுமலை அன்று மாநிலத்திலேயே முதல் மாணவனுகத் தேர்ச்சி பெற்றுர். அவர் சிறந்த தமிழறிஞர்; நல்ல நிர்வாகி.

— சேவு. அண. அண்ணுமலைச் செட்டியார்

ஒருவருடைய குணங்களையும் பெருமைகளையும் அறிய அவருடைய நண்பர்களைப் பார்த்தால் போதும். கல்வித் தொண்டு செய்பவர்கள் விழா எடுப்பதிலிருந்து இதன் சிறப்பு வெளிப்படும்.

— துணை வேந்தர் எம். லெட்சுமணன்

சுப. அண்ணாமலை தமிழ் வளர்த்த பேராசிரியர். என் குடும்பத்தில் இருவர் அவர் கீழே பணியாற்றி நல்ல பெயர் பெற்றிருக்கிறார்கள். அவரைப் பாராட்ட சில சொற்கள் போதும். அவர் அறிஞர்களைப் படைத்து ஐந்து கண்டங்களுக்கும் அனுப்பியிருக்கிறார். சுப. அண்ணாமலை ஆற்றிய கல்வித்தொண்டு போதும்; எழுத்துத் தொண்டு போதும். அவரும் தமிழண்ணலும் சமூகத் தொண்டில் ஈடுபட வேண்டும்.

— கி. ஆ. பெ. விசுவநாதம்

கலைத் தந்தை அவர்கள் அறிவு, தகுதி பார்த்து ஆசிரியர்களைத் தேர்வு செய்வார்கள். நான் தியாகராசர் கல்லூரியின் பழைய முதல்வரை அனுப்பி விட்டு சுப. அண்ணாமலையைப் புதிய முதல்வராக நியமித்தேன். அப்படி நியமித்தபோது அவருடைய திறமையை அறியவில்லை. அவர் கல்லூரியைச் சிறப்பாகக் கொண்டு வந்தார்.

— கருமுத்து சு. சொக்கலிங்கம்

சுப. அண்ணாமலை என்னுடைய குழந்தை. அவர் பாண்டி நாட்டு முத்து. அவர் அடக்கமானவர். சிறந்த பண்பாளராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது புகழ் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. இன்னும் வளரும்.

— ரா. அரங்ககிருஷ்ணன்

எனக்கும் சுப. அண்ணாமலைக்கும் சில பொருத்தங்கள் உண்டு. இருவரும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் பணி செய்து வருகிறோம். இருவரும் கலைத் தந்தையால் உருவானவர்கள். பல பொருத்தங்களில் ஓய்வு பெறும் பொருத்தமும் ஒன்று. மணிவிழாவிலும் ஒற்றுமை வந்தது. எதிர்காலத்திலும் பல ஒற்றுமைகள் ஏற்பட வேண்டும். புலமைமிக்க அவர் இன்னும் சிறந்த பதவிகளைப் பெற வேண்டும்.

— முனைவர் தமிழண்ணல்

இத்தனை சிறப்புகளுக்கும் காரணமான என் தந்தை, தாய்க்கு அஞ்சலியைச் செலுத்துகிறேன். என்னைப் படிக்க வைத்த வள்ளல் மெ. வுக்கும் என்னைப் படிக்கத் தூண்டிய சேவு. அண. வுக்கும் என் சிறப்புக்களுக்கெல்லாம் காரணகர்த்தாவான கலைத் தந்தைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தெய்வம் எனக்குக் கொடுத்த வரம் என் மனைவி. இந்த அன்பையும் நன்றியையும் எத்தனை பிறவி எடுத்தாலும் மறக்க மாட்டேன்.

— முனைவர் சுப. அண்ணாமலை

(முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு 13-10-89 அன்று மதுரையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தொகுத்தவை)

தொகுப்பு: "எல்லெஸ்"

முத்துராமனுக்கு ரஜினிகாந்த் பாராட்டு!

பிரபல திரைப்பட இயக்குநர் எஸ்பி. முத்துராமன் அவர்களின் புதல்வர் திரு. எம். சுப்பையாவுக்கு 7-9-89 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது.

திருமணத்திற்கு 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த், பிரபு, ஜெய் கணேஷ், திலீப், மனோரமா, 'இசைஞானி' இளையராஜா, கங்கை அமரன், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் மற்றும் பலர் வந்திருந்து சிறப்பித்தனர்.

இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன் அவர்கள் தனது வரவேற்புரையில் ''நான் பணத்தைச் சேர்க்கவில்லை. இவர்களைப் போன்ற நண்பர்களைத்தான் சம்பாதித்து வைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் வாழ்த்திப் பேசுகையில் ''முத்துராமன் சார் பேசும்போது நான் பணத்தைச் சேர்க்கவில்லை. நண்பர்களைத்தான் சம்பாதித்து வைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார். அதற்கு நான் ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன்:

''ஒரு பெரிய கோடீஸ்வரருக்கு 20 இலட்சம் ரூபாய் வருமான வரி போட்டு அன்று மாலையே முழுப் பணத்தையும் கட்டணும்னு ஆர்டர் வந்தது. பெரிய கோடீஸ்வரராக இருந்தும் நிறையச் சொத்துக்கள் இருந்தும் அவரால் ஒரு நாளைக்குள் ஒரு இலட்சம் கூடச் சேர்க்க முடியவில்லை. ரொம்பக் கவலையாக இருந்தார். அப்பொழுது ஒரு சாதாரணமான நண்பர் வந்தார். கோடீஸ்வரரின் பிரச்னையைக் கேள்விப்பட்ட அவர் ''உங்கள் பிரச்சனையை நானே தீர்த்து வைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு நான்கைந்து பேருக்குப் போன் செய்தார். ஒரு மணி நேரத்தில் 20 இலட்சம் ரூபாயைச் சேர்த்து விட்டார். கோடீஸ்வரர் அதிசயப்பட்டார் அதே போல் முத்துராமன் சார் ஒரு டெலிபோனில் எதை வேண்டுமானாலும் சாதிக்கிற சக்தி படைத்தவர்.''

தொழிலில் எழுச்சி காணும் இளம் பொறியாளர்

திரு. சி. அண்ணுமலே பள்ளத்தூரைச் சேர்ந்த திரு. பி. சிதம்பரம் செட்டியார் அவர்களின் புதல்வராவார். ஆர்வமிக்க இளம் பொறியாளரான இவர் தன் தந்தையார் அரியமங்கலம் தொழிற் பேட்டையில் நடத்தி வரும் 'ஸ்ரீ சாரதா இண்டஸ்ட்ரீஸ்' தொழிலகத்தை, மேலாளராக இருந்து சிறப்புடன் கவனித்து வருகிறுர். சிறுவயதிலிருந்தே பொறியியல் சாதனங்களைப் பயன்படுத்தி இவர் தனது அறிவுத் திறனே வளர்த்து வந்துள்ளார்.

இவர்களது தொழிலகத்தில் இரயில்வேக்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. கனடா, உகாண்டா, பங்களாதேஷ், தாய்லாந்து போன்ற வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கப்பல்களிலிருந்து பொருட்களே இறக்கி அவற்றை லாரி, சரக்கு இரயில் போன்றவற்றில் ஏற்றும் போது அங்கு பூட்டு அவசியமாகிறது. அதை Retractrable Anchorage Lock என்பார்கள். சாதாரணமாக இருந்த அந்தப் பூட்டை இவர் தம் திறமையால் Semy Automatical Lock என்ற புதிய பாணி பூட்டாகத் தயாரித்து வெற்றி கண்டுள்ளார். தென்னக இரயில்வே பொது மேலாளர் இவரது திறமையைப் பாராட்டியுள்ளார். பூனேயில் உள்ள நேஷனல் ரிசர்ச் டெவலப்மெண்ட் சென்டரின் தலேவரும் இந்தப் புதிய கண்டுபிடிப்பைப் பாராட்டியுள்ளார். இந்த மாதிரியான செமி ஆட்டோமாடிக் லாக் இப்போது உலகெங்கும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. பிரான்ஸ் நாட்டில் நடந்த இசால் கண் காட்சியில் இவர் வடிவமைத்த கண்டெயினர் லாக்கிங் சிஸ்டம் இடம் பெற்று அங்கு பலரது பாராட்டுதலேயும் பெற்றது. அக் கண்காட்சிக்குப் பின் பல அயல் நாடுகள் இவர் தயாரித்த பூட்டை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

பம்பாயில் நடந்த இந்தியத் தொழில் நுட்ப இயந்திரக் கண்காட்சியில் கலந்து கொண்ட இவர், அங்கு ஒரு அரங்கில் கண்ட ஆட்டோமாடிக் பிளாஸ்டிக்



இன்செக்ஷன் மோல்டிங் இயந்திரத்தைப்போல் தங்களது தொழில் கூடத்தில் தயார் செய்துள்ளார். இதன் வேலேப்பாடு பம்பாய் கண் காட்சியில் வைக்கப்பட்டிருந்த இயந்திரத்தை விடச் சிறப்பாக உள்ளதென தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் பாராட்டிச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

செய்தி

ஃ கல்லலேச் சேர்ந்த என். பழநியப்பன் அவர்கள் இப்போது சென்னே உயர் நீதி மன்றத்தில் Industrial Special Tribunalன் தலேமை நீதிபதியாகப் பணியாற்றி வருகிறுர்கள்.


மணி விழா

வலையபட்டி ராம. மு. முத்துக்கருப்பஞ்செட்டியார் அவர்களுக்கும் திருமதி இராமாயி ஆச்சி அவர்களுக்கும் வலையபட்டியில் 12-9-89 அன்று 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப்பாக நடைபெற்றது.

மணிவிழாவன்று காலையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திரு. T. இராமநாதன் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினர். முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் திருச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. மலர் மன்னன் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், முனைவர் தமிழண்ணல், முத்தமிழ்மணி திரு கதி. சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. எல். எஸ் முத்துக்கருப்பன் நன்றி கூறினர்.

முதல் நாள் (11-9-89) இரவு ''கண்ணதாசன் கவிதைகளில் மேலோங்கி நிற்பது காதலா, தத்துவமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது. 'காதலே' என்ற அணியில் முனைவர் அறிவொளி, திரு. அரு நாகப்பன் முனைவர் டாழ. முத்தப்பன் ஆகியோரும் 'தத்துவமே' என்ற அணியில் முனைவர் சொ. சத்தியசீலன், புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் செல்வி சு. சரஸ்வதி ஆகியோரும் வாதிட்டனர். நடுவர் பொறுப்பேற்றிருந்த முனைவர் தமிழண்ணல் 'தத்துவமே' எனத் தீர்ப்பு வழங்கினர்.

மணிவிழாவன்று இரவு மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவின் இன்னிசை விருந்தும் இரவு பஞ்சமூர்த்தி திருஉலாக் காட்சியும் சிறப்புற நிகழ்ந்தன.



மணிவிழாத் தம்பதியர் வலையபட்டி திரு. ராம. மு. முத்துக் கருப்பன் செட்டியார் - திருமதி இராமாயி ஆச்சியுடன் மு. தியாகராஜன், மு. கனகசபை, மு. சிங்காரம், எல். எஸ். முத்துக் கருப்பன் ஆகியோர்.

உ சிவமயம்
ஸ்ரீ முருகன் துணை
ஓம் சாமியே சரணம் ஐயப்பா



ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்காவணி மூல வீதி,
மதுரை-625001
போன்: 31168

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

சபரிமலைப் பயண விபரம்

16-11-89 To 17-11-89	கார்த்திகை மீ	1உ	2 நாள்	ரூ. 140/-
25-11-89 To 26-11-89	,,	10உ	2 நாள்	ரூ. 140/-
3-12-89 To 6-12-89	,,	18உ	4 நாள்	ரூ. 280/-
8-12-89 To 10-12-89	,,	23உ	3 நாள்	ரூ. 220/-
9-12-89 To 10-12-89	,,	24உ	2 நாள்	ரூ. 140/-
11-12-89 To 13-12-89	,,	26உ	3 நாள்	ரூ. 210/-
15-12-89 To 17-12-89	,,	30உ	3 நாள்	ரூ. 220/-
18-12-89 To 20-12-89	மார்கழி மீ	3உ	3 நாள்	ரூ. 220/-
21-12-89 To 23-12-89	,,	6உ	3 நாள்	ரூ. 220/-
21-12-89 To 26-12-89	,,	6உ	6 நாள்	ரூ. 420/-
24-12-89 To 26-12-89	,,	9உ	3 நாள்	ரூ. 215/-
1-1-90 To 3-1-90	,,	17உ	3 நாள்	ரூ. 220/-
5-1-90 To 7-1-90	,,	21உ	3 நாள்	ரூ. 215/-
1-1-90 To 4-1-90	பெரிய பாதை	17உ	4 நாள்	ரூ. 290/-
4-1-90 To 8-1-90	,,	20உ	5 நாள்	ரூ. 350/-
5-1-90 To 8-1-90	,,	21உ	4 நாள்	ரூ. 290/-
9-1-90 To 12-1-90	,,	25உ	4 நாள்	ரூ. 290/-
11-1-90 To 16-1-90	,,	27உ	6 நாள்	ரூ. 420/-
13-1-90 To 15-1-90	ஜோதி தரிசனம் பஸ் கட்டணம்			ரூ. 120/-
17-1-90 To 18-1-90	படி பூஜை		2 நாள்	ரூ. 140/-

சபரிமலைப் பயணங்கள் யாவும, பஸ் கட்டணம், காலை ஆகாரம் பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட், காரம் காபி இரவு ஆகாரம் உள்ளிட்டதாகும். இரு முடி கட்டிச் செல்ல வசதி உண்டு. இரு முடிச் செலவு ரூ. 45/- தனி. அட்வான்ஸ் ரூ. 75/- வீதம் செலுத்தி விரைவில் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

பயணங்கள் வெவ்வேறு ரூட்டுக்களில் செல்லக் கூடியவை. பயணங்கள் பற்றிய முழு விவரங்களை விரிவான நோட்டீஸில் தெரிந்து கொள்ளலாம்.



சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் மேல்நிலைப் பள்ளியின் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் காரைக்குடி வெ. நாராயணன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சிவராமனுக்கும் காரைக்குடி அழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி உண்ணாமலைக்கும் 18-10-89 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சாயாவனத்தில் இயற்பகை நாயனார் திருவிழா

அறுபத்து மூன்று நாயன்மார்களில் நகரத்தார் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஐவர். அவர்களில் ஒருவர், இல்லையே என்னாத இயற்பகை நாயனார். அந்த இயற்பகை நாயனாருக்கு காவிரிப்பூம்பட்டினம் அருகே உள்ள சாயாவனத்தில் நான்காம் ஆண்டாக காரைக்குடி திரு. பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார் திருவிழா நடத்தவிருக்கிறார். அத்திருவிழா மார்கழி மீ 2 உ (17-12-89) முதல் 6 உ (21-12-89) வரை 5 நாட்கள் சாயாவனத்தில் நடைபெற உள்ளது.

திருவிழாவிற்குச் செல்பவர்களுக்கு காவிரிப்பூம்பட்டின நகர விடுதியில் தங்கவும் உணவருந்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருவிழாவிற்கு நன்கொடை அனுப்ப விரும்புவோர் திரு. பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார் 87 சி. மெ. வீதி, காரைக்குடி-623001 என்ற முகவரிக்கு அனுப்பி திருவிழாவைச் சிறப்பிக்கலாம்.

இராமாயணம் பட்டாபிஷேகம்

காரைக்குடி கொறட்டியார் வீட்டில் முப்பத்தைந்தாவது ஆண்டாக 17-9-89 முதல் 27-9-89 முடிய இராமாயணம் படிக்கப் பெற்றது. மெ. காந்திச் செட்டியார் இராமாயணம் படித்தார். 27-9-89 அன்று நிகழ்ந்த பட்டாபிஷேக நிகழ்ச்சியில் திரு. குமரப்ப செட்டியார் வரவேற்று மாலை சூட்டினார். 'நமஸ்காரம்' பழநியப்ப செட்டியார் ''சம்பூர்ண இராமாயணம்'' பாடினார். 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் பொன்னாடை போர்த்திப் பட்டாபிஷேகம் பற்றிப் பேசினார்.

திருமண மண்டபத் திறப்பு விழா

நாட்டரசன்கோட்டையில் இராமகிருஷ்ணன் செட்டியார்-வள்ளியம்மை ஆச்சி திருமண மண்டபத் திறப்பு விழா 25-10-89 அன்று கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மண்டப உரிமையாளர் திரு. சுப. ராம. லெ இராமகிருஷ்ணன் செட்டியார் வரவேற்ருர். சுத்தானந்த பாரதியார் மண்டபத்தைத் திறந்து வைத்தார். திருமதி இராம. வள்ளியம்மை ஆச்சி குத்துவிளக்கு ஏற்றினர்- தலைமை ஆசிரியை பிரமீளா விஜேந்திரா வாழ்த்துரை வழங்கினர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் ''ஸ்ரீ மீனுட்சி திருக்கல்யாணம்'' பற்றி உரையாற்றினர். திரு. இராம வள்ளியப்ப செட்டியார் நன்றி கூறினர்.

சுப. அண்ணுமலையின் மணி விழா

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் முன்னுள் முதல்வரும் சிறந்த இலக்கியச் சிந்தனையாளருமான தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணுமலை-திருமதி மீனுட்சி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 3-10-89 அன்று பிள்ளையார் பட்டியில் சிறப்பாக நிகழ்ந்தது.

மணி விழாவை யொட்டி காலையில் கவியரங்கம் நிகழ்ந்தது. திரு. கண. சிற்பேசன் வரவேற்புரை நிகழ்த்தினுர். 'முத்தமிழ் மணி' பேராசிரியர் திரு. கதி. சுந்தரம் கவியரங்கத் தலைமை ஏற்க ''மலர் ஒன்று இதழ் ஐந்து'' என்ற பொதுத் தலைப்பில் முனைவர் சபா. அருணுசலம், முனைவர் ஆ. ஆனந்தராசன், முனைவர் ந. மாணிக்கம் திரு. இல. க. சுபாஷ் சந்திரபோஸ், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் கவி பாடினர்.

பேராசிரியர் அருட்கவி திரு. கு. செ. இராமசாமி வாழ்த்து மடல் வாசித்தளித்து பாராட்டுரை வழங்கினுர்.


மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் மாலையணிவித்தார்கள். தியாகராசர் கல்லூரி தமிழ்த் துறை சார்பாகவும் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பாகவும் பாராட்டுச் செய்யப் பெற்றது.

முனைவர் திரு. சுப. அண்ணுமலை அவர்கள் ஏற்புரை வழங்கிய போது கூறியதாவது:—

என் பூமாலை கனக்கிறது; கவிஞர்களின் புகழ் மாலையும் கனக்கிறது. பேச நா எழவில்லை. என் புகழுக்கு மூவர் காரணமானவர்கள். ஒருவர்: என் தந்தையார். அடுத்தவர்: தேவகோட்டை தமிழ் வள்ளல் சேவு. மெ. அவர்கள். மூன்ருமவர்: தமிழாசிரியர் ரமேஷ் அய்யர் அவர்கள். நான் தமிழ் கற்றேன்; தமிழ் பெற்றேன். நல்ல தமிழை நான் இன்னும் நிறைய அறிய வேண்டியிருப்பதால் நான் மீண்டும் செட்டிநாட்டிலேயே பிறக்க வேண்டும்.

— இவ்வாறு அவர்கள் கூறினுர்கள்

திரு. மாரியப்பன் நன்றி கூறினுர்.



குருவிக்கொண்டான்பட்டி பழ. ப. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. பழநியப்பனின் புதல்வியுமான செல்வி மீனாள் என்ற நாச்சம்மைக்கும் பனையப்பட்டி செ. சு. பழ. இராமநாதன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B Com, க்கும் குருவிக்கொண்டான்பட்டியில் 3-9-89 அன்று திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது

'காசிஸ்ரீ' சுப. இராகவன் மணிவிழா

நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவின் தலைவர் 'காசிஸ்ரீ' திரு. சுப. இராகவனின் மணிவிழா சென்னையில் பாலாஜி கல்யாண மண்டபத்தில் 11-10-1989 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதனை ஒட்டி முதல் நாள் நிகழ்ந்த கவியரங்கிற்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினார். பல கவிஞர்கள் கவி பாடினர்.

மணிவிழாவன்று நிகழ்ந்த வாழ்த்தரங்கிறகு சென்னை நகரத்தார் சங்கத் தலைவர் திரு எஸ். ஆர்எம். பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் தலைமை தாங்கினார். திரு. சுப. சின்னக்கருப்பன் வரவேற்றார். மாவட்ட நீதிபதி திரு. கணேசன், திருவாளர்கள் மங்களமுடையார், கண. சிற்சபேசன், இரா. கிருஷ்ணன், திருத்தொண்டர் வயிரவன், காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன், காசிஸ்ரீ திரு நாவுக்கரசு செட்டியார் காசிஸ்ரீ சிதம்பரம் செட்டியார், காசிஸ்ரீ பழநியாண்டி செட்டியார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். 'காசிஸ்ரீ' திரு. சுப. இராகவன் ஏற்புரை வழங்கினார்.

செய்திகள்

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலின் குடநீராட்டு விழா 7-9-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகளின் மூன்றாவது ஆண்டு பீட ஆரோஹண விழா 28-9-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

"நகரத்தார்கள் சாமர்த்தியசாலிகள்!"

அவர் ஒரு நகரத்தார். திருமணம் செய்து கொள்ளாதவர். அனாதை. வயது 70. கண் பார்வை தெரியாதவர். அவர் ஒரு பிள்ளையார் கோயிலில் தங்கியிருந்து வந்தார்.

'பல பூக்களைக் கொண்டு ஒரு மண்டலத்திற்கு சக்திபூஜை செய்து வந்தால் பராசக்தி நேரில் தோன்றி கேட்ட வரங்களைத் தருவாள்' எனக் கேள்விப்பட்டு அதுபோல் அவர் விரதம் மேற்கொண்டு பூஜை செய்து வந்தார். சக்தி நேரில் தோன்றி "நீ பாவி. உனக்கு ஒரு வரமும் அளிக்க இயலாது. நேம நிஷ்டைப்படி என்னைப் பூஜித்தால் உனக்கு ஒரு வரம் மட்டும் தர விரும்புகிறேன். உனக்குத் தேவையான வரத்தைக் கேட்டுக் கொள்" என்று கூறியது. அதற்கு அவர் "உடனே கேட்டால் நான் எப்படிச் சொல்வது. யோசித்து நாளை அந்த வரத்தைக் கேட்கிறேன்" என்றார்.

அது போல் மறுநாள் சக்தி தோன்றியது. அவர் "என்னுடைய பேரக்குழந்தை தங்கக் கிண்ணத்தில் பாலும் சோறும் உண்பதை நான் என்னுடைய இந்த இரண்டு கண்களாலும் பார்த்து ரசிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதே போல சக்தியும் வரம் அளித்தாள்.

அவரோ வயதானவர்; கண்பார்வை தெரியாதவர்; திருமணம் செய்து கொள்ளாதவர். ஒரு வரத்திலேயே தன்னுடைய பல தேவைகளை நிறைவு செய்து கொண்டார். நகரத்தார்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

— நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

(கானாடுகாத்தான் சிதம்பர விநாயகர் கோயில் கூட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பு கூறியது)

தகவல்: நா. சித. இராமநாதன்
கானாடுகாத்தான்


கேட்டு எழுதியவர்: எல். சுந்தரம்

சுப. அண்ணுமலேக்குப் பாராட்டு விழா!

மதுரை தியாகராசர் கலேக் கல்லூரியின் முன்னுள் முதல்வர், தமிழாகரர், முனைவர் சுப. அண்ணுமலே அவர்களுக்கு மணி விழாக் குழுவின் சார்பாக 13-10-89 அன்று மதுரையில் மதுரை - இராமநாதபுரம் வணிகக் கழகக் கட்டிடத்தில்பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்குத் தொழிலதிபர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலேமை ஏற்ருர்கள். திரு. ந. மணிமொழியன் வரவேற்புரை நிகழ்த்தியபின் லெ. நா. அவர்கள் தலேமையுரையும் இராம. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் தொடக்க உரையும் ஆற்றினுர்கள். அவர்களேத் தொடர்ந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. வி. என் சிதம்பரம் செட்டியார், திரு. சேவு. அண. அண்ணுமலேச் செட்டியார், கருமுத்து திரு. தி. கண்ணன், கருமுத்து திரு. சு. சொக்கலிங்கம் செட்டியார், துணேவேந்தர் திரு. எம். லெட்சுமணன் முனைவர் திரு. தமிழண்ணல், திரு. விஜய திருவேங்கடம் திரு. சாலமன் பாப்பையா, ஆசிரியர் திரு. ரா. அரங்க கிருஷ்ணன், திரு. எல். கே. சுபாஷ் சந்திரபோஸ், மருத்துவர் திரு. எஸ். சண்முகம் செட்டியார், திரு. தங்கப்பட்டர் செல்வி சௌந்தர பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணிவிழா மலரை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்



பட்டினத்தடிகளின் திருவிழாவில் மயானக் காட்சியில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் பட்டினத்தார் பாடல்களேப் பாடுகிருர். அருகே திருவாளர்கள் நா. அரு. கா. அருணுசலம் செட்டியார், பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார், சொ. பழநிமலே 'காசிஸ்ரீ' சித. சிதம்பரம் செட்டியார்.

வெளியிட 'மீனுட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வாழ்த்துப் பா வாசித்தளித்தார். கவிஞர் திரு. பெரி. சிவனடியான் கவிதையில் வாழ்த்தினுர்.

இவ்விழாவில் மணி விழா நாயகருக்கு இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் மலர் மாலை அணிவித்து நல்லாடை வழங்கினுர்கள். கருமுத்து திரு. தி. கண்ணன் மணிவிழாத் தம்பதியருக்குப் பொன்னுடையும் மலர் மாலையும் அணிவித்தார்கள்.

மணி விழாக் குழு சார்பாக 'அறமனச் செம்மல்' சேவு அண. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் மணி விழாத் தம்பதியருக்கு தங்கச் சங்கிலியும் தங்க மோதிரமும் நினைவுப் பரிசாக வழங்கினுர்கள்.

முனைவர் திரு. சுப. அண்ணுமலை எழுதிய ''திருக்குறள் சிந்தனை'' என்ற நூலில் 60 பிரதிகளை வாங்கி நூலகங்களுக்கு வழங்குவதாக திரு. செல்வி சௌந்தர பாண்டியன் அறிவித்தார். அதனை திருமதி நிர்மலா மோகன் பெற்றுக் கொண்டார்.

மணி விழாத் தம்பதியருக்கு மதுரை அருள்மிகு மீனுட்சி அம்மன் திருக்கோயில் சார்பாக மாலை அணிவித்துப் பிரசாதம் வழங்கப் பெற்றது.

மணி விழாத் தம்பதியருக்கு திருவள்ளுவர் கழகம், திருப்புகழ் சபை, மதுரை அண்ணுநகர் சர்வேஸ்வரர் ஆலயம் போன்ற பல்வேறு அமைப்புக்களின் சார்பாக பாராட்டுச் செய்யப் பெற்றது.

மணி விழாக் குழுவின் தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார், பொருளாளர் திரு. இராம. முத்தழகப்ப செட்டியார் இணைச் செயலாளர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் விஜயா பிரிண்டர்ஸ் திரு. ஆர். சொக்கலிங்கம் ஆகியோருக்கு முனைவர் திரு. சுப. அண்ணுமலை பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்.

இவ்விழாவில் ரூ. 5000/- வீதம் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப் பெற்று அவற்றிற்கான காசோலைகளில் ஒன்று மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திற்கும் மற்றொன்று மதுரை தியாகராசர் கல்லூரிக்கும் வழங்கப் பெற்றன.

திரு. லெ. மு. மு. முத்து மாணிக்கம் நன்றி கூறினுர்.

வேந்தன்பட்டி நகரத்தார்களின் தீர்மானம்

வேந்தன்பட்டி நகரத்தார்கள் 20-7-89 வியாழன் இரவு வேந்தன்பட்டி நகர விடுதியில் கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறுர்கள்:

நமது திருமணங்களில் திருமணம் முடிந்து பகல் சாப்பாடு முடிந்த பின் பெண் அழைத்து விட்டு மாப்பிள்ளை வீட்டில் மாலைப் பலகாரம் சாப்பிட்டு எல்லோரும் சொல்லிக் கொண்டு வருவதென்றும் இதை நாளது ஆண்டு கார்த்திகை மாதம் முதல் நடைமுறைக்குக் கொண்டு வருவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்றது.

செய்தி

ஃ கம்பம் அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோவிலில் 30-10-89 முதல் 5-11-89 வரை 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் பெரிய புராணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.



மணிவிழாச் செல்வர் முனைவர் திரு. தமிழண்ணலுக்கு மதுரையில் 7-10-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னுடை அணிவித்த காட்சி. அருகே மணிவிழா நாயகி திருமதி சிந்தாமணி ஆச்சி.

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' இதழ் நல்ல மாற்றங்களுடனும் விறு விறுப்பான புதிய செய்திகளுடனும் நம்மவர்களின் 'கெஜட்' டாக வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுக்குரியது

ந. எழிலரசன்

பாண்டிச்சேரி

'நகரத்தாரே சிந்தியுங்கள்' என்ற தலைப்பில் வெளி வந்த சிறு தொகுப்பும் புலவர் மாமணியின் சிறு கருத்தும் நகரத்தார் குலப் பெண்களுக்கு (மாமியார்களுக்கு) நல்ல சவுக்கடியாக உள்ளது. பாராட்டுக்கள்.

— கனகு சுப்பு

— கல்யாணி கணேசன்

நன்னிலம்

தங்களது அக்டோபர்' 89 இதழில் வெளியாகி உள்ள ''திருமண மாலைக்கு.. சில பாடல்கள்'' கருத்துச் செறிவும் தெய்வமணம் கமழ்வதாகவும் அமைந்த பாடல்கள் ஆகும். அதை எழுதியுள்ள திரு. மு. நா. நாராயணனுக்கும் வெளியிட்ட ''குர'' லுக்கும் நன்றி

சி. ராம. நா. நா.

இராமநாதன் செட்டியார்

ஆ. முத்துப்பட்டணம்

அக்' 89 இதழில் வெளியாகி உள்ள 'பெண்ணுசை படுத்தும் பாடு' என்ற துணுக்குச் செய்தி நல்ல கருத்தை எடுத்துச் சொல்வதுடன் நகைச்சுவையாகவும் உள்ளது.

சோம. கண்ணப்பன்


சென்னை.

''நகரத்தார் குரல்'' அக்டோபர்' 89 இதழில் வெளி வந்துள்ள செய்திகள் அனைத்தும் பயனுள்ளவை. நகரத்தாரே சிந்தியுங்கள், ஆசிரியருக்குக் கடிதம் (கழுத்து உரு பற்றியது) ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

ஆர். அருணாசலம்

சென்னை

உழைப்பால் உயர்ந்த உத்தமர்



தோற்றம்
1-8-1906

மறைவு
1-10-1989

திரு. N.S.S. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்

கண்டவராயன்பட்டி

ஸ்தாபகர் : N. S. S. சொக்கலிங்கம் செட்டியார் & Co.
ஈரோடு & திருநெல்வேலி டவுன்

கலசா காப்பி எஸ்டேட்

கலசா, கர்நாடகா மாநிலம்

அபிராமி 70 M. M. A/c

தேவி அபிராமி A/c தியேட்டர்ஸ்

ஈரோடு

உழைப்பையே உயிர்மூச்சாகக் கொண்டு
கடமையை இரண்டு கண்களாகக் கொண்டு
காலமெல்லாம் உழைத்திட்ட காவலரே!
உங்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி.

இப்படிக்கு மகன்கள்
சொ. சிவசுப்பிரமணியம்
N. S. S. செந்தில்நாதன்

வாழ்வரசி வள்ளியம்மை

(நாலு பத்து ஆண்டுகளாய் நான் பழகி வந்ததொரு
கோல மயிலுக்குக் கொடுக்கின்ற நற்சான்று)

ஆடிக்களித்தவளே! அன்பின் பிறப்பிடமே!
கூடவந்த பூங்கொடியே! கொஞ்சு மனோரஞ்சிதமே!
வள்ளியம்மைப் பெண்ணுளே! வாழ்வரசி ஆனவளே!
புள்ளிமயில் வாகனத்தாள் பொன்னடியைச் சேர்ந்தவளே!
ஏறிவருங் காலத்தில் ஏணிபறி போனதடி!
ஊறிவருங் காலத்தில் ஊற்றுக்கண் மூடியதே!
இறப்பதுவும் பிறப்பதுவும் இயற்கையென்று சொல்லுகிறுர்
இறந்தவுடன் தீயிட்டு ஈமச்ச டங்காகிவிட்டால்
மறப்பதுதான் மரபென்று மக்கள்பலர் சொல்லுகிறுர்கள்
மறந்துவிடும் மனம்வைக்க மறந்துவிட்டான் என்செய்வேன்!
என்னைமறந்தே இருக்கின்ற வேளையிலும்
உன்னைமறந்திருக்க ஒருவழியும் காணேனே!
உன்னோடு நான்வாழ்ந்த உவப்பான இல்லறத்தில்
என்பெருமை சொல்வதற்கு இருந்திடுவாய் என்றிருந்தேன்
உன்னுடைய பெருமைகளை ஊரறியச் செய்வதற்கு
என்னை நிறுத்திவிட்டு ஏனடி நீ முந்திவிட்டாய்?
அன்புள்ள பிள்ளைகளும் அருமைத் திருமகளும்
என்னதான் அருகிருந்து இமைபோலக் காத்தாலும்
உன்னருகில் நானிருந்த உற்சாக மில்லையடி!
சுவையறிந்து தந்திடுவாய்! சொல்லறிந்து பேசிடுவாய்!
பசியறிந்து ஊட்டிடுவாய்! பக்குவமாய்ச் சொல்லிடுவாய்!
வேகமாய் நானிருந்தால் வேகத்தடை ஆகிடுவாய்!
தாகமாய் நானிருந்தால் தண்ணீராய் மாறிடுவாய்!
தைரியத்தை நானிழந்தால் தலைதூக்கி நின்றிடுவாய்!
கைநடுங்கும் போதெனக்குத் கைத்தடியாய் மாறிடுவாய்!
புத்தி தடுமாறுகையில் புதுயுக்தி சொல்லிடுவாய்!
சித்தம் தடுமாறுகையில் சிதையாது காத்திடுவாய்!
உண்ணுகின்ற பொருட்களை நீ ஒவ்வொன்றாய்ச் சீராக்கி
கண்கடுக்கக் கைகடுக்கக் கல்லுகளைத் தான்பொறுக்கி
பண்படுத்திச் சமைக்கின்ற பக்குவத்தைச் சொல்லிடவா
பாசமுடன் ஊட்டுகின்ற பண்பாட்டைச் சொல்லிடவா
அலமாரித் தட்டுகளில் அடுக்கிவைக்கும் அழகினைத்தான்
அருகிருந்து பார்த்தவர்க்கு அதிசயமாய்த் தோணுதடி
எத்தனைதான் அவசரமாய் இருந்திட்ட போதினிலும்
சுத்தமாய்ச் செய்திடுவாய்! சுறுசுறுப்பு இல்லையென்பார்
நல்லபழக்கங்களை நாள்தோறும் சொல்லிவைத்து
பிள்ளைகளை நீவளர்த்த பெருமைதனைக் காணுகிறேன்
இன்பத்தின் எல்லைக்கு எனைக்கூட்டிச் சென்றவளே!
துன்பத்தின் எல்லையை நீ தொடர்பாக்கி விட்டுவிட்டாய்!
வாழ்வு முடிந்ததென்று வழிகாட்டிச் சென்றுவிட்டாய்
நாள்காட்டி இதழ்களைத்தான் நானும் உதிர்க்கின்றேன்
திட்டமிட்ட காரியத்தைத் திருப்தியாய்ச் செய்துவிட்டு
வட்டமிடும் மனக்குயிலே வருகின்றேன் காத்திருப்பாய்!
என்றும் உனதன்பான இராமவே. சேதுராமன்.

உ
சிவமயம்

கண்டரமாணிக்கம் வ. பெரி. வ. வள்ளியப்ப செட்டியார்–நாச்சம்மை ஆச்சியின் மகளும் நாச்சியாபுரம் இராமவே. சேது ராமன் செட்டியாரவர்கள் மனைவியுமான

வாழ்வரசி வள்ளியம்மை ஆச்சி

தோற்றம்:	திருமணம்	மறைவு:
10-6-31	12-11-48	21-1-89



வள்ளியம்மைத் தாயாரே!
வாழ்வரசி ஆனவரே!
எள்ளளவும் - தந்நலமே
இல்லாத - தெள்ளமுதே!
என்றும் துணையிருந்தே
எங்கள் குலம் காத்திடுவீர்
இன்பமுடன் வாழ இனிது

டாக்டர் சே. இளங்கோவன் B Sc, M.E, Ph d.

பலவான்குடி வள்ளியம்மை சிவராமன் B.Sc.

சே. இராமையா B Sc., (C. A)

நகரத்தார் திருமணச் சேவை

நகரத்தார் சமூகத்தில் திருமணம் ஆகவேண்டிய ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர் தோதுக் கேற்ப சம்பந்தங்களை ஏற்படுத்தித் தருவதாக சென்னை மயில் மார்க் நிலைய திருமண சேவைப்பிரிவு அறிவித்துள்ளது.

எனவே அந்நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர்-

1. மாப்பிள்ளை அல்லது பெண்ணின் பெயர்
2. கோவில்
3. பிரிவு
4. வயது
5. கல்வித் தகுதி
6. வேலை அல்லது வருமானம்
7. சொந்த ஊரும் முகவரியும்
8. தற்போதைய முகவரி
9. ஜாதக விவரம்
10. பிற விவரங்கள்

ஆகிய பத்துக்கும் விவரம் தெரிவித்து நகரத்தார் திருமணச் சேவைப் பிரிவு, மயில் மார்க் நிலையம் மனை எண் 131, பழநியப்பா நகர், சென்னை-600 087 அல்லது மயில் மார்க் நிலைய திருமணச்சேவைப் பிரிவு சொக்கலிங்கம்புதூர், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்ற முகவரிக்கு எழுதலாம்.

அஷ்டலெட்சுமிக் கவசம்

மதுரை ஸ்ரீமுருகன் டிராவல் ஏஜன்ஸியார் இலவசமாக வெளியிட்டுள்ள ஸ்ரீ மஹாலெட்சுமி பூஜை, அஷ்டலெக்ஷிமிக் கவசம் அடங்கிய நூலினைப் பெற விரும்புவோர் 9, வடக்காவணி மூல வீதி, மதுரை - 625 001 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கும்பகோணம் சங்கத்தில் பாராட்டு விழா

கும்பகோணம் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் கும்பகோணத்தில் 15-10-89 அன்று சங்கத்தின் தலைவர் திரு. பி. எஸ். ஆர்எம். முத்தையா தலைமையில் தமிழக அரசின் வழக்கறிஞர் திரு. ஏஆர். லெட்சுமணனுக்குப் பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது. செயலாளர் திரு. எம். இராமசாமி நிகழ்ச்சிகளைத் தொகுத்து நடத்தினர். தலைவர் வரவேற்புரை நிகழ்த்த திரு. கே. இராமசாமி சங்கத்தின் ஆறுமாத காலப் பணியினை விளக்கினர்.

முனைவர் திரு. தமிழண்ணலை எஸ்டி. ஆர்எம். சிதம்பரம் செட்டியாரும் முனைவர் திரு சுப. அண்ணுமலையை திரு. ஆர்எம். முத்தையாவும் அறிமுகம் செய்து வைத்தனர். முனைவர் திரு. தமிழண்ணலும் முனைவர் திரு. சுப. அண்ணுமலையும் நாகப்பா சைக்கிள் மார்ட் பங்குதாரர் திரு. ஆர்எம். முத்தழகப்ப செட்டியாரும் திரு. ஏஆர். லெட்சுமணனைப் பாராட்டிச் சிறப்பித்தார்கள்.

அரசு வழக்கறிஞர் திரு. ஏஆர். லெட்சுமணனை திரு. எம்பி. சொக்கலிங்கம் அறிமுகம் செய்து வைத்தார். தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்கு திரு. லெட்சுமணன் நன்றி தெரிவித்துப் பேசினர். பின் திரு. லெட்சுமணன் கும்பகோணம் சங்கம் வாங்க இருக்கும் கட்டிடத்திற்கு நன்கொடையாக ரூ. 1001ஐ திரு. ஆர்எம். முத்தழகப்ப செட்டியார் மூலம் வழங்கினர்.

இவ்விழாவில் கலந்து கொண்ட சிறப்பு அழைப்பாளர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்



கும்பகோணம் சங்கத்தில் திரு. ஏஆர். லெட்சுமணனுக்கு 15-10-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் செயலாளர் திரு. எம். இராமசாமி பேசும் காட்சி. அருகே திருவாளர்கள் பி. எஸ். ஆர்எம். முத்தையா, முனைவர் தமிழண்ணல், ஏஆர். லெட்சு மணன், முனைவர் சுப அண்ணாமலை ஆர்எம். முத்தழகப்பசெட்டியார்.

கப் பெற்றன.

இவ்வாண்டு பிளஸ் 2ல் 1200க்கு 1065 மதிப்பெண்கள் பெற்ற செல்வி எஸ். அடைக்கம் மைக்கும் பத்தாம் வகுப்பில் 1100க்கு 863 மதிப்பெண்கள் பெற்ற செல்வன் என். காசி நாத்துக்கும் சங்கத்தின் சார்பாக திரு. ஏஆர். லெட்சுமணன் பரிசு களை வழங்கினார்.

விழாவில் கலந்து கொண்ட ஆண், பெண் அதிர்ஷ்டசாலி களுக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன. இரவுவிருந்தை பத்துப் பேர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நகரத்தார் புத்தக வங்கியின் ஆண்டு விழா

மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் திருச்சி நகரத் தார் சங்கத்தினருக்குப் பாராட்டு விழாவும் 15-10-89 அன்று மதுரை ராஜா முத்தையா மன் றத்தில் சிறப்பாக நிகழ்ந்தது.

ஆண்டு விழாவிற்கு 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம் பரம் செட்டியார் அவர்கள் தலைமையேற்றார்கள்.

முன்னதாக செம்பனூர் நா. மாணிக்கம் செட்டியார் அவர் கள் திருவிளக்கேற்றி வைத்தார் கள். திரு. தேவ. நா. வெங்கடா சலம் வரவேற்புரை நிகழ்த்தி னார். திரு. தி. ராஜா ஆண்டறிக் -கை வாசித்தார்.

வி. என். சிதம்பரம் செட்டி யார் அவர்களின் தலைமையுரை யைத் தொடர்ந்து கலைமகள் திரு. இராம. நடராசன் செட்டியார்,

கருமுத்து திரு. சு. சொக்கலிங்கம் செட்டியார் திரு. சொக்கு சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினுர்கள்.

புத்தக வங்கியைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு திரு. அண. சுப்பையா நினைவுப் பரிசுகளை வழங்கினுர்.

அடுத்து ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனு தமிழ்வாணன் சிறப்புரையாற்றினுர். முன்னதாக திரு. லேனுவைப் பற்றித் தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் அறிமுகக் கவிதை பாடினுர். திரு. கேஎம். தமிழரசன் நன்றி கூறினுர்.

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்களைச் சிறப்பாக நடத்தி வரும் திருச்சி நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் உறுப்பினர்கள் இவ்விழாவில் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்ருர்கள். இந்நிகழ்ச்சிக்குத் தொழிலதிபர் திரு. அரு. சோமசுந்தரம் தலைமை ஏற்ருர்.

திருச்சி நகரத்தார் சங்கத்தினரைப் பாராட்டி திரு. எம். சிஎன். மாணிக்கம், திரு. கே. மகாதேவன் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் 'இரசிகமணி' திரு. இராம. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் பேசினர்.

திருச்சி நகரத்தார் சங்கத்தினரைப் பாராட்டி தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் வாழ்த்துக் கவிதை வாசித்தார்.

திருச்சி சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு தொழிலதிபர் சோம. பழநியப்ப செட்டியார் அவர்களும் திருமதி மனேன்மணி கண்ணப்பனும் பொன்னுடை அணிவித்தனர்.

திருச்சி சங்கத்தின் தலைவர் திரு. எல். என். லெட்சுமணனும் செயலாளர் திரு. எஸ்பி. அருணுசலமும் திரு. வி. என். ஏ. நாகப்ப செட்டியாரும் ஏற்புரை நல்கினர்.

புத்தக வங்கி சார்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மதுரை சோஷியல் ரெக்ரியேஷன் கிளப்பின் தலைவர் திரு. அடைக்கப்ப செட்டியார் பரிசுகளை வழங்கினுர்.

திரு. செந்தில் நன்றி கூறினுர்.

விழாவின் இறுதியில் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் இயக்கிய ''விடுதலை யாருக்கு?'' என்ற புதுமையான நீதி மன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. நீதிபதியாக பூம்புகார் பேராசிரியர் திரு. ஆ. ஜெகந்நாதன் பொறுப்பேற்றிருந்தார்.

இவ்விழாவில் நகரத்தார் புத்தக வங்கியையும் அதன் தலைவர் திரு. பழ. இராமசாமியையும் பாராட்டி திருச்சி நகரத்தார் சங்கத்தின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் நன் கொடை அளித்தனர்.


இயற்கை எய்தினுர்

ஈரோடு என். எஸ். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அன்கோ ஈரோடு அபிராமி தியேட்டர்ஸ் மற்றும் கர்நாடக மாநிலம் கலசாவில் உள்ள கலசா எஸ்டேட் ஆகிய நிறுவனங்களின் நிறுவனரான கண்டவராயன் பட்டியைச் சேர்ந்த நா. சி. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தமது 83ஆவது வயதில் 1-10-89 அன்று கண்டவராயன் பட்டியில் இயற்கை எய்தினுர்கள். இறையுணர்வும் தர்மசிந்தையும் உடைய அவர்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிருேம்.

இவர்களுக்கு திரு. சொ. சிவசுப்பிரமணியம் திரு. சொ. செந்தில்நாதன் என இரு புதல்வர்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

காரைக்குடி
கி. நா. கண்ணன்

தமிழ்க்கடல் இராய. சொ. கம்பனடிப் பொடி சா. கணேசன் ஆகியோரின் நெருங்கிய நண்பரான காரைக்குடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கி. நா. அவர்களின் புதல்வர் திரு. கி. நா. கண்ணன். கடந்த 14 & 15-8-89 தேதிகளில், சென்னையில் நிகழ்ந்த தமிழ் நாடு இந்தியன் வங்கி அதிகாரிகள் சங்கத் சங்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில் 7 ஆம் முறையாக



இவர் போட்டியின்றி பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். கடந்த 12 ஆண்டுகளாகவே இவர் இப்பதவியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர், அகில இந்திய இந்தியன வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், எல்லா வங்கிகளும் இணைந்த அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் துணைப் பொதுச் செயலாளராகவும், அகில இந்திய கூட்டுறவு வங்கி அதிகாரிகள் சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும் இருந்து செயலாற்றி வருகிறார்.

அத்துடன் இந்தியாவிலுள்ள வங்கி அதிகாரிகள் சம்பள விகிதங்களுக்கான உயர்மட்ட அளவிலுள்ள பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினருமாவார்.

நம்மினத்தவருக்கு இவர் செய்துவருகின்ற உதவிகள் ஏராளம். மிகுந்த இறையுணர்வு கொண்ட இவர் கோவில்களுக்காகச் செய்து வரும் அரும்பணியினை காரைக்குடிப் பகுதி நன்கறியும்.

இதற்கு முன் இந்தியன் வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் இவர் தொண்டாற்றியுள்ளார்.

செய்திகள்

ஃ 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களின் 67 ஆவது பிறந்த தினத்தையொட்டி கீழச்சிவல்பட்டி எஸ். எம். எஸ். மேனிலைப் பள்ளியில் 7-11-89 அன்று குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

ஃ வேந்தன்பட்டி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஐப்பசி மீ 26 உ (11-11-89) மாலை 3-00 மணி அளவில் மகா பிரதோஷ விழாவும் அருள்மிகு நெய் நந்தி எம்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் உட்பிரகாரத்தில் சுவாமி எழுந்தருளுதலும் நடைபெற உள்ளன.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்